

SLEE Publishers

# அல்வாய் அரசடி விநாயகர் பக்திப் பாடல்கள்



ஆக்கம்:
சுந்தரம்பிள்ளை திருப்பரங்குன்றன்



# அல்வாய் அரசடி விநாயகர் பக்திப் பாடல்கள்


**ஆக்கம்:**
**சுந்தரம்பிள்ளை திருப்பரங்குன்றன்**



***SLEE Publishers***
***ஆனி 2015***

# அல்வாய் அரசடி விநாயகர் பக்திப் பாடல்கள்

## பாடல் 1

**பல்லவி**

விநாயகரைத் துதிப்போம் துதிப்போம் - அல்வாய்
அரசடி விநாயகரைத் துதிப்போம்

**சரணங்கள்**

காற்றாய் கதிராய் கடலின் அலையாய்
ஊற்றாய் உயிராய் உலகின் அசைவாய்
ஈற்றாய் முதலாய் இருளில் ஒளியாய்(த்)
தோற்றம் தருவாய் துணையாய்த் தொடர்வாய்

விண்ணாய் மண்ணாய் வீழும் மழையாய்
கண்ணாய் கருவாய் கனியின் சுவையாய்
பண்ணாய் பாட்டாய் பற்பல கலையாய்
எண்ணாய் எழுத்தாய் என்றும் இருப்பாய்

அறிவாய் அருளாய் அன்பின் உருவாய்
பொறியாய் புதிராய் புலரும் பொழுதாய்
நெறியாய் நிமிர்வாய் நீளும் நதியாய்
செறிவாய்த் தருவாய் செழிப்புறச் செய்வாய்

ஒன்றாய் பலதாய் உள்ளத் துணர்வாய்
நன்றாய் நலமாய் நானிலத் தெழிலாய்
இன்றாய் நேற்றாய் இனிவரும் நாளாய்
நின்றாய் துணையாய் நிதம்உடன் வருவாய்

## *பாடல் 2*

### *பல்லவி*

*அரசடி விநாயகனே! ஐங்கரனே! - அல்வாய்*
*அடியவர்க் கருளிடும் அற்புதனே!*

### *சரணங்கள்*

*தெவிட்டாத தேவாரம் காதினிக்கும் - தீபம்*
*திசையெங்கும் தரும்ஒளியைக் கண் சுவைக்கும்*
*அவிட்டிதழ் மலர்பூக்க மணம் பிறக்கும் - சுவை*
*ஆறும்தரும் தீர்த்தம் நா வினிக்கும்*

*மெய்சிலிர்க்கும் வேழ முகனைத் தொழுதால் - என்றும்*
*மேன்மைவரும் ஒருமுறை அவனை நினைத்தால்*
*வையகத்தைக் காத்தருளும் உமை மைந்தனே! - எங்கள்*
*வாழ்வெல்லாம் துணைவருவாய் வெள்ளைக் கொம்பனே!*

*கந்தனுடன் வள்ளியம்மை கரம்பிடிக்க - நீயும்*
*களிறுருவில் செய்தவிந்தை கண்டு சிலிர்த்தோம்*
*வெந்துயரை விண்ணவர்கள் விட்டகல - தந்தம்*
*விட்டெறிந்து கஜமுகனை வீழ்த்த வியந்தோம்*

*அரசமர நிழலமர்ந்த ஆதிவடிவமே! - என்றும்*
*அழகொளிரும் அமுதுவக்கும் அன்பின் உருவமே!*
*உரசியெழும் காற்றுடனே கவலையெல்லாம் - பறந்து*
*ஓடிவிடும் உனைக்கணம் தொழுதோர்க் கெல்லாம்*

*பரம்பொருளாய் வீற்றிருக்கும் பசும்பொன் மேனியே! - வண்ணப்*

*பட்டொளிரும் பவளமணி முத்தழகனே!*

*வரம்தருவாய் வைத்தீஸ் வரன்புதல்வனே! - சூரன்*

*வதத்திற் குதவிய வல்லபை துணைவனே!*



## *பாடல் 3*

### *பல்லவி*

*கண்கவரும் கரங்கள் ஐந்தாற் காக்கும் வல்லவா! - நின்னை(க்)*
*கண்கள் காணக் கவலை நீங்கும் நெஞ்சில் அல்லவா!*

### *சரணங்கள்*

*வானளாவி வளர்ந்திருக்கும் அரச விருட்சத்தின் - கீழே*
*வந்தவர்க்கு அருள்புரியும் ஞான விருட்சமே!*
*கானம்பாடும் பறவைகளின் கீதம் ஒலித்திடும் - உந்தன்*
*கருணையினால் அகிலம்முழுதும் அமைதி பூத்திடும்*

*மேளநாத இசைவிருந்து காற்றில் மிதந்திடும் - அழகு*
*மிளிரஆனை முகந்தேரும் அசைந்து நகர்ந்திடும்*
*நாளும்தொழும் பக்தர்க்கெல்லாம் நன்மை கிட்டிடும் - உன்னை*
*நம்பிவந்தோர் மனைகள் தன்னில் மகிழ்ச்சி கொட்டிடும்*

*அருள்வேண்டி இருகரம் நாம் கூப்பிநிற்க - உன்தன்*
*ஐங்கரமும் அணைத் தெம்மை ஆதரிக்க*
*இருள்போக்கி இன்னல்கள் தீர்ப்பவனே! - அல்வாய்*
*இருப்போரின் மனம் கவர்ந்த விநாயகனே!*

*வங்கத்துக் கடற்காற்று வீசிஎழுந்திடும் - அல்வாய்*
*வந்துனது மீதுபட்டு ஆசி பெற்றிடும்*
*திங்களும் கதிரவனும் தேன் மலர்களும் - சேர்ந்த*
*தெவிட்டாத உன்னுருவம் கண்ணில் நிறைந்திடும்*

## *பாடல் 4*

### *பல்லவி*

*எண்ண எண்ண இனிக்கிறது - உன்தன்*

*எழிலுருக் கோலம் இழுக்கிறது*

*பண்ணும் பாட்டும் ஒலிக்கிறது - உன்னை(ப்)*

*பாட மனம்தான் தவிக்கிறது*

### *சரணங்கள்*

*ஆனை முகனே! ஐங்கரனே! - இந்த*

*அகிலம் போற்றும் அற்புதனே!*

*பானை வயிறு கொண்டவனே! - தொழும்*

*பக்தர்க் கருள் பாலிப்போனே!*

*வண்ண மலர்கள் சாற்றிடுவோம் - மஞ்சள்*

*வைத்து அருகம் புல்லிடுவோம்*

*உண்ணும் மோதகப் பிரியனே! - எமக்கு*

*உவந்தருட் பொழியும் உத்தமனே!*

*மண்ணும் விண்ணும் போற்றுகின்ற - அழகு*

*மா மயிலோன் சோதரனே!*

*கண்ணும் கருத்தாய்க் காப்பவனே! - எங்கள்*


*கருணைக் கடலே கணபதியே!*

*சின்ன எலி வாகனனே! - பெரும்*

*செவிகள் உடைய வித்தகனே!*

*நின்னைத் தொழுதால் வாழ்வுயரும் - இந்த*

*நிதர்சனம் புரிந்தால் ஊர்உயரும்*



## பாடல் 5

### பல்லவி

அண்டிவரும் துன்பமெல்லாம் அகன்றுவிடும் - அல்வாய்
அரசடி விநாயகனின் ஐங்கரங்கள் தாங்கும்

### சரணங்கள்

எண்ண எண்ண மனம்மகிழும் இன்பம் பெருகும் - எம்முள்
ஏங்கும் குறைகளெல்லாம் இனி மருகும்
கண்ணைக் கவர்ந்திழுக்கும் கருணை ஒளி - எழும்
கஷ்டங்கள் விலக்கிவிடும் கணபதியின் விழி

ஞானம்தரும் திருவடிகள் நமைக்காக்கும் - அவனை
நாளும் தொழுது வந்தால் நன்மை ஓங்கும்
வானம்போல அகன்று செல்லும் திருவயிறு - அதனுள்
வையகத்தை அடங்க வைக்கும் அவனுயர்வு

பாசம் ஏந்தியகை படைத்து நிற்க - சுவை
பகரும் மோதகக்கை அருளைப் பாய்ச்ச
வாசம் ததும்பும் துதிக் கையழகா! - என்றும்
வந்தெமக்கு அனுக்ரகம் தா இறைவா!

காத்தருளும் கணபதியின் தந்தக்கரம் - பெரும்
கயவர்களை அழிக்கவெழும் அங்குசக்கரம்
பூத்தமலர் போன்றமுக முடையவனே! - எல்லாப்
பூதங்கட்கும் அதிபதி யானவனே!

## *பாடல் 6*

### *பல்லவி*

*அரசடி விநாயகனே! போற்றி! போற்றி! - எமக்கு*
*அனுதினம் அருளிடும் ஐங்கரனே போற்றி!*

### *சரணங்கள்*

*இசையுடன் ஆலரசு இணைந்தாடும் - பனை*
*ஈன்றிட்ட வடலிகள் அதைமேவும்*
*திசையெங்கும் உன்னுருவம் தெரிந்திடுமே! - தென்னங்*
*கீற்றிடை கதிரவன் எழுந்திடுமே!*

*பூவரசும் புற்றரையும் புகழ்பாடும் - மேற்கே*
*புனிதநீர் கிணற்றருகே வழிந்தோடும்*
*தேவரசம் ததும்பும்பக்தித் தேவாரம் - தேன்*
*தமிழிசை பரப்பும் ஓர்ஆதாரம்*

*செறிந்தவறி வூட்டும்சிறி லங்காப்பள்ளி - உடன்*
*சிறந்தநற் சனசமூக நிலையங்கள்*
*நெறியாய் வாழ்விக்கும் சர்வாயுதா! - எம்மை*
*நிழல்போற் தொடர்வாய் விக்னேஸ்வரா!*

*குச்சத்தில் வைரவர் குடிகொண்டார் - குண*
*திசையினில் முத்துமாரி அருள்தந்தாள்*
*இச்சகம் காத்திடும் இனியவனே! - மாறாம்*
*புலத்தினில் ஒளிரும் மாணிக்கமே!*

*சாமணந்தறை அமர் பெருமானே! - தனம்*

*தந்திடு பூவற்கரை உறைவோனே!*

*பூமணம் தவழ்ந்திடும் காத்தானே! - அல்வாய்*

*புகழ்பூக்க அனைவரும் அருள்வாரே!*



## *பாடல் 7*

### *பல்லவி*

*நாயகரே! வி நாயகரே! //*
*நாயகரே! வி நாயகரே! //*

### *சரணங்கள்*

*அல்வாய்க் குருக் கட்டின் நாயகரே!*
*நல்வாழ் வளிக்கும் வி நாயகரே!*
*வல்லா யுதமும் வஞ்சை மொழியும்*
*நில்லா துன்முன் நீறாய் ஒழியும்*

*பொய்யும் புரட்டும் புகழைக் கெடுக்கும்*
*மெய்யும் அறமும் மேன்மை கொடுக்கும்*
*வையம் காக்கும் வைகுண்டன் மருகா!*
*ஐயம் தெளிப்பாய் அன்பைப் பொழிவாய்*

*செல்லாப் பொருளும் செழித்து வளரும்*
*இல்லா தெனினும் இனிதாய்க் கிடைக்கும்*
*கல்லாற் கசியும் கருணை ஊற்றே!*
*எல்லா வளமும் இனிதே தருவாய்*

*படரும் நோய்கள் பஞ்சாய்ப் பறக்கும்*
*தொடரும் பேய்கள் தொலைந்து மறையும்*
*இடரும் வலிகள் இல்லா தொழியும்*
*விகடர் துணையால் வீழ்விலும் எழுவோம்*

## பாடல் 8

### பல்லவி

*அகிலத்தை ஆழ்வோனே வாழ்க! - அறிவு*
*அனைத்தையும் அருளிடும் அழகோனே! வாழ்க!*

### சரணங்கள்

*வயலெங்கும் கதிர்சாய்ந் தாடும் - வங்கக்*
*கடல்தரும் காற்றுடன் களனிகள் பாடும்*
*பயம்தரும் வினையகன் றோடும் - ஞானம்*
*பாலிக்கும் அரசடி யானருள் கூடும்*

*குளிர்மையைத் தருகின்ற மதிபோல் - நெஞ்சு*
*குளிர்ந்திடும் கபிலரைக் குறையின்றித் துதித்தால்*
*மிளிர்ந்திடும் வாழ்வு அவனருளால் - பக்தி*
*மிகப்பட உயர்வார்கள் மயூரேசர் புகழால்*

*சித்தியுடன் புத்தியுடன் சேர்ந்து - எமக்கு*
*சித்தமும் ஞானமும் சிறப்புடன் சுரந்து*
*நித்தமும் குறைவின்றிக் கொடுத்தாய் - இங்கு*
*நீயின்றி எமக்கொரு வாழ்வுண்டுடோ நிறைவாய்*

*அகத்தியர் அகந்தையை அடக்கி - புவி*
*அழகுறக் காவேரி நதிவெள்ளம் பெருக்கி*
*நிகழ்த்திய நாடகம் அருமை - உன்னை*
*நினைந்து தொழுதாற் கிடைக்குமே பெருமை*

தந்தையும் தாயுமே உலகம் - என
தரணிக்கு உணர்த்திய மாங்கனிக் கலகம்
சிந்தையில் நாம்நிறுத்து வோமே! - என்றும்
சிரம்தாழ்த்தி தலைகுட்டி தாழ்பணி வோமே!



## பாடல் 9

### பல்லவி

முத்தமிழின் நாயகனே! மூவுலகும்
முதல்வணங்கும் விநாயகனே! மங்களமே!

### சரணங்கள்

விண்ணவர்கள் போற்றுகின்ற வெள்ளிநிலவே!
வீழ்ந்தவரைக் காத்தருளும் வீரஉறவே!
அண்டமெல்லாம் உன்துணையின் அதிசயமே!
அருள்சுரக்கும் அரசடியான் மங்களமே!

இன்பமெல்லாம் பொங்கியெழும் இவனிருப்பால்
ஈடேறும் நினைத்ததெல்லாம் அவனருளால்
துன்பம்தரும் தீவினைகள் தூர்ந்துவிடும்
தூயமனம் தந்தரசடியான் மங்களமே!

பட்டதுன்பம் பாழாகும் பாவம்தீரும்
பகைமையெண்ணம் மறைந்தொழியும் பாசம்சேரும்
தொட்டதெல்லாம் துலங்கும் தோஷம்போகும்
தொப்பை வயிறரசடியான் மங்களமே!

ஐந்துதலை ஐந்துகரம் நெற்றிக்கண்ணும்
அழகுதரும் துதிக்கை தந்தமுடன்
பைந்தமிழர் வாழ்வொளிர வளம்சமைக்கும்
பசுமைமிகு அரசடியான் மங்களமே!

